**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8069887

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : Vellore PS: VK AC, Vellore Year: 2020 FIR No.: 10/2020 Date 30/10/2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 29-10-2020 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 19.45 hrs Time to : 02.45 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 30-10-2020 Time : 12.15 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol-II Time : 12.15 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: TASMAC Shop No. 11111, old Bus stand Backside, Vellore. South, near 1 km.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M.S. DeenaDayalan (b) Father's/ Husband's Name : M.R. Sadagopa Ramanujam.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : A/50. (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspector - Cell Inspector (g) Address : No. 215 B, Periyar Nagar, Anna St, Puthuvanur, Bank Nagar Ext, Vellore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்.
1) Ti. K. Venkatesan, A/51/20, S/o. K. Kannan, Supervisor, TASMAC Shop No. 11111, Vellore.
(2). M. Balaraman, A/52/20, S/o. Munisamy, Additional Supervisor, TASMAC Shop No. 11111, Vellore.
(3) D. Karunanithi A/42/20, S/o. V.T. Dasarathan, Salamman, TASMAC Shop No. 11111, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/10/2020 — [signature] 30/10/20.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2020 at 14:30 hrs

Name: பெயர் M. RAJANIKANTH,
Rank: நிலை Inspector of Police, VAC, Vellore No. எண் …………

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> இன்று 30.10.2020 தேதி பகல் 12.15 மணியளவில் நான் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு. M.S. தீனதயாளன், ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர் ஆஜராகி கீழ்கண்ட புகாரை கொடுத்தார் அதன் விவரம்: அனுப்புநர்: திரு. M.S. தீனதயாளன், ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு ஆய்வுக்குழு ஆய்வாளராக உள்ளேன். வேலூர் மாவட்டம், வேலூர் மாநகரம் பழைய பேருந்து நிலையத்தின் பின்புறம் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண்.11111-ல் போலி மதுபாட்டில் விற்கப்படுவதாகவும், மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்பதாகவும், மேலும் எந்த மதுபாட்டிலுக்கும் வாடிக்கையாளர்களுக்கு ரசீது கொடுப்பிதில்லை எனவும் கணக்கு வழக்கு எதுவும் சரியாக பராமரிப்பதில்லை எனவும் இரவு 19.00 மணிக்கு கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் பேரில், தகவலர்களால் எனக்கு வரப்பெற்ற தகவலை தக்க தகவலர்கள் மூலம் உறுதி செய்யப்பட்டபடியாலும், நான் 29.10.2020 ஆம் தேதி இரவு 19.30 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து அலுவலகத்தில் இருந்த வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.ரஜனிகாந்த் மற்றும் அலுவலர்களுடன் இணைந்து, 29.10.2020-ம்தேதி இரவு சுமார் 19.55 மணி முதல் 29/30.10.2020 விடியற்காலை 02.45 மணி வரை வேலூர் பழைய பேருந்து நிலையத்தின் பின்புறம் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண்.11111-ல் என்னுடைய தலைமையில், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் அலுவலர்களுடன் மேற்படி கடையில் இருதுறை திடீர் கூட்டு தணிக்கை செய்தோம். மேற்படி கடையில் குழுவினருடன் உள்ளே சென்றபோது, கடையில் வாடிக்கையாளர்கள் கூட்ட நெரிசலுடன் மதுபானங்கள் வாங்க முன்டியடித்துக்கொண்டிருந்தனர், அவர்களை விலகிச்செல்ல சொல்லி எங்கள் குழுவினருடன் கடையின் உள்ளே சென்றோம். காலி அட்டை பெட்டிகள் கடையின் வாசலிலேயே குவித்து வைக்கப்பட்டிருந்தன. மேலும் அந்த கடையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பணியாளர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டோம், மேற்படி கடையில் அப்போது பணியில் 1)திரு.M.பலராமன், வயது-52/20, த/பெ.முனிரத்தினம், கூடுதல் மேற்பார்வையாளர், (இருப்பிட முகவரி: நெ.25, நவநீதம்மன் கோயில் தெரு, கோட்டை பின்புறம் வேலூர்), 2)திரு.R.ஸ்ரீதரன் (வயது-44/20), த/பெ.ராஜன், விற்பனையாளர், (இருப்பிட முகவரி: நெ.2/35, திருமணி ரோடு, சேனூர் கிராமம், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம்), 3)திரு.S.G.ராஜா (வயது 43/20), த/பெ.M.கங்காதரன், விற்பனையாளர், (இருப்பிட முகவரி: நெ.128, நேரு நகர், பகுதி-2, சத்துவாச்சாரி, வேலூர்), 4)திரு.D.கருணாநிதி (வயது 42/20), த/பெ.V.T.தசரதன், விற்பனையாளர் (இருப்பிட முகவரி:

நெ.2/142G, ஈஸ்வரன் கோயில் தெரு, வஞ்சூர் கிராமம், சேனூர் அஞ்சல், வேலூர்) ஆகியோர் இருந்தனர். அவர்களிடம் நாங்கள் வந்த நோக்கத்தையும் மற்றும் அவர்கள் முன்பு சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. மேற்படி கடை இரவு 20.00 மணிக்கு வாடிக்கையாக முடப்பட்டது. மேற்படி பணியாளர்களிடம் தங்கள் கடையின் மேற்பார்வையாளர் யார் என்று கேட்க அவர்கள் இக்கடையின் மேற்பார்வையாளர் திரு.K.வெங்கடேசன் என்றும் அவர் வெளியே சென்றிருப்பதாகவும், தகவல் சொல்லி வரசொல்வதாகவும் சொன்னார்கள், இரவு 20.25 மணிக்கு இக்கடையின் மேற்பார்வையாளர் திரு.K.வெங்கடேசன் த/பெ.கேசவன் கடைக்கு வந்து ஆஜர் ஆனார். மேலும் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் திருமதி.கீதாராணி அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லப்பட்டது, அவர்களிடம் இருப்பு சரிபார்க்க தகுந்த அலுவலர் ஒருவரை அனுப்பும்மாறு கோரப்பட்டது. மேற்படி டாஸ்மாக் கடைக்கு இரவு 20.45 மணிக்கு டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்கள் மதுபானக்கடையின் இருப்பு சரிபார்க்க அனுப்பியதாக திரு.மதன், இளநிலை உதவியாளர், மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக், நெ.1, காட்பாடி ரோடு, தோட்டபாளையம், வேலூர் அவர்கள் ஆஜரானார். மேற்படி கடையில் ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய என் தலைமையில் மற்றும் டாஸ்மாக் இளநிலை உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் இருதுறை கூட்டு திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின்போது 1)மேற்பார்வையாளர் திரு.K.வெங்கடேசன் அவர்களை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை, 2)கூடுதல் மேற்பார்வையாளர் திரு.M.பலராமன் அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூபாய் 1900/- இருந்தது மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவர் தனது வீட்டிற்கு பொருட்கள் வாங்க வைத்திருந்த பணம் என்று கூறியதின்பேரில் விசாரணை செய்து மேற்படி பணத்தை திரும்ப அவரிடமே கொடுக்கப்பட்டது, 3)விற்பனையாளர் திரு.R.ஸ்ரீதரன் அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூபாய் 80/- இருந்தது மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது, 4)விற்பனையாளர் திரு.S.G.ராஜா அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூபாய் 330/- இருந்தது மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது, 5) விற்பனையாளர் திரு.D.கருணாநிதி அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூபாய் 750/- இடது பக்க பேன்ட் பாக்கெட்டிலும் மற்றும் வலது பக்க பேன்ட் பாக்கெட்டில் ரூபாய் 12,000/- இருந்தது, மேற்படி பணம் குறித்து கேட்க ரூபாய் 750/- தனது சொந்த பணம் என்றும் ரூபாய் 12,000/- காலி அட்டை பெட்டி விற்பனை செய்த பணம் என்றும் அதை வங்கியில் செலுத்தவேண்டியது என்று கூறினார் அதற்கான அத்தாட்சி ஏதாவது உண்டா என்று கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறமுடியவில்லை, எனவே மேற்படி பணம் ரூபாய் 12,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி மேற்பார்வையாளர் திரு.K.வெங்கடேசன் அவர்களிடம் வேறு யாரேனும் இக்கடையில் பணிசெய்கிறார்களா என கேட்க அவர் மொத்தம் 6 விற்பனையாளர்கள் என்றும் இன்று பணியில் உள்ளவர்களை தவிர 1)விற்பனையாளர் E.மணவாளன், 2)திரு.V.பாரதி, 3)S.சாந்தகுமார் ஆகியோர் பணியில் இல்லை. விசாரணையின்போது மேற்படி விற்பனையாளர்கள் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தங்களுக்குள் பணி மாற்றி கொள்வார்கள் என்றும் மேற்படி மூவரும் இடநெருக்கடி மற்றும் இதர காரணங்களால் மூன்று விற்பனையாளர்கள் மட்டும் எப்போதும் பணியில்

இருப்பார்கள் என்று கூறினார். மேற்படி டாஸ்மாக் கடை எண்.11111 பழைய பேருந்து பின்புறம் திரு.V.A.கோபால் என்பவரின் கடையில் வாடகைக்கு எடுத்து நடத்தப்பட்டுவருகின்றது. மேற்படி கடையானது மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி கடையானது அம்மா பிரியாணி கடைக்கு எதிரே உள்ள சந்தில் அமைந்துள்ளது. மேற்படி கடைக்கு இரும்பு கேட் போடப்பட்டுள்ளது, மேலும் இரும்பு ஷெட்டர் அமைக்கப்பட்டுள்ளது. கடையானது 10x14 அளவுகொண்டதாக அமைந்துள்ளது. மேற்படி கடையானது இரண்டு பாகமாக தடுக்கப்பட்டுள்ளது. கடையின் முன்னே Blue Star குளீர்சாதன பெட்டி இரண்டு மேல்பக்க கதவுகள் கொண்டதாக உள்ளது, அதில் King fisher, Zingaro Beer பாட்டில்கள் அடிக்கிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி கடையின் தெற்கு வடக்கு கிழக்கு ஆகிய திசைகளில் மரத்தினாலான அலமாரிகளில் மதுபாட்டில்கள் அடிக்கிவைக்கப்பட்டுள்ளன. மேற்படி கடையின் கீழே அட்டை பெட்டிகளில் மதுபாட்டில்கள் அடிக்கிவைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று மேற்படி கடையின் உள்ளே உள்ள அறையில் சுவற்றில் இரும்பு பெட்டகம் அமைக்கப்பட்டுள்ளது, அதில் சோதனை செய்ய அதில் ஒன்றும் இல்லை. மேற்படி அறை முழுவதும் அட்டை பெட்டிகளில் மதுபானங்கள் அடிக்கிவைக்கப்பட்டுள்ளது. பின்னர் நான் மற்றும் டாஸ்மாக் இளநிலை உதவியாளர் திரு.மதன் அவர்களின் உதவியுடன் கடையின் மதுபான இருப்பு சரிபார்க்கப்பட்டது. மேற்படி கடையின் நேற்றைய விற்பனை ரூபாய் 8,18,170/- (2000 x 17 = 34,000, 500 x 970 = 4,85,000, 200 x 450=90,000, 100 x 1792 = 1,79,200, 50 x 509 = 25,450, 20 x 47 = 940, 10 x 358 = 3,580). மேலும் மேற்படி டாஸ்மாக் கடை எண்.11111 இருப்பு நிலவரத்தை ஆய்வு செய்யும்போது 01.10.2020 அன்று காலை இருப்பு 10.00 மணி நிலவரப்படி 2736330 தொடங்கி 03.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050431988, கொள்முதல் மதிப்பு 15,44,400/-, 05.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432038 கொள்முதல் மதிப்பு 9,78,000/-, 07.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432136 கொள்முதல் மதிப்பு 16,02,780/-, 09.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432223 கொள்முதல் மதிப்பு 12,38,400/-, 12.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432325 கொள்முதல் மதிப்பு 12,20,400/-, 13.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432391 கொள்முதல் மதிப்பு 9,57,840/-, 15.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432457 கொள்முதல் மதிப்பு 17,18,400/-, 17.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432552 கொள்முதல் மதிப்பு 9,85,440/-, 20.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432644 கொள்முதல் மதிப்பு 22,46,640/-, 22.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432724 கொள்முதல் மதிப்பு 6,46,800/-, 24.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432814 கொள்முதல் மதிப்பு 13,92,720/-, 27.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432897 கொள்முதல் மதிப்பு 17,11,680/- 29.10.2020 அன்று கொள்முதல் (Invoice NO) எண்.S050432978 கொள்முதல் மதிப்பு 16,22,160/-. 01.10.2020 காலை நிலவரப்படி இருப்பு நிலவரம் ரூபாய் 27,36,330/- 29.10.2020 வரையிலான கொள்முதல் மதிப்பு ரூபாய் 1,78,65,660/- ஆக நேற்றைய நிலவரப்படி நிகர இருப்பு ரூபாய் 2,06,01,990/-. 11. 01.10.2020 ந்

தேதி முதல் 29.10.2020 ந்தேதி வரை யூனியன் வங்கி, வேலூர் கிளையில் வங்கி கணக்கு எண். 33089 கணக்கில் கட்டிய தொகையின் விவரம்:

| வ.எண். | பணம் கட்டிய தேதி | செலுத்திய பணம் | செலுத்தியவர் |
|---|---|---|---|
| 01. | 01.10.2020 | 672590 | வெங்கடேசன் |
| 02. | 03.10.2020 | 685350 | வெங்கடேசன் |
| 03. | 05.10.2020 | 1571060 | வெங்கடேசன் |
| 04. | 06.10.2020 | 635620 | வெங்கடேசன் |
| 05. | 07.10.2020 | 616530 | வெங்கடேசன் |
| 06. | 08.10.2020 | 582890 | வெங்கடேசன் |
| 07. | 09.10.2020 | 611330 | வெங்கடேசன் |
| 08. | 12.10.2020 | 2042490 | வெங்கடேசன் |
| 09. | 13.10.2020 | 638160 | வெங்கடேசன் |
| 10. | 14.10.2020 | 589110 | வெங்கடேசன் |
| 11. | 15.10.2020 | 587310 | வெங்கடேசன் |
| 12. | 16.10.2020 | 584680 | வெங்கடேசன் |
| 13. | 17.10.2020 | 598190 | வெங்கடேசன் |
| 14. | 19.10.2020 | 1387960 | வெங்கடேசன் |
| 15. | 20.10.2020 | 510020 | வெங்கடேசன் |
| 16. | 21.10.2020 | 545690 | வெங்கடேசன் |
| 17. | 22.10.2020 | 523030 | வெங்கடேசன் |
| 18. | 23.10.2020 | 672160 | வெங்கடேசன் |
| 19. | 27.10.2020 | 2685100 | வெங்கடேசன் |
| 20. | 28.10.2020 | 723940 | வெங்கடேசன் |
| 21. | 29.10.2020 | 693890 | வெங்கடேசன் |
| | **மொத்தம் வங்கியில் செலுத்திய தொகை** | 1,81,57,100 | |

நேற்று 29.10.2020 தேதி டாஸ்மாக் கடை எண்.11111 நாங்கள் ஆய்வு செய்தபோது பணம் இருப்பு நிலவரம் (விற்பனை தொகை) ரூபாய் 8,18,170/- நேற்றைய விற்பனை தொகை இருப்பு கழிக்க நேற்றைய நிலவரப்படி கடையின் உள்ளே இருக்கவேண்டிய இறுதி இருப்பு தொகை ரூபாய் 22,99,310/- ஆகும், ஆனால் புல தணிக்கையின்போது ரூபாய் 22,91,370/- உள்ளது, வித்தியாச தொகை ரூபாய் 7,940/- குறைவாக உள்ளது. மேலும் இக்கடையின் விற்பனை ரசீது புத்தகத்தை மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசனிடம் கேட்க அவர் விற்பனை ரசீது ஏதும் பராமரிப்பதில்லை என கூறினார்.

மேற்படி டாஸ்மாக் கடை எண்.11111-ல் பராமரிக்கப்படும் ஆவணங்கள் பற்றி மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசனிடம் கேட்க கீழ்கண்ட ஆவணங்களை ஆஜர் செய்ததை பார்வையிட்டு வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது.

| வ.எண். | பதிவேடு | பதிவேட்டின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 01. | வருகை பதிவேடு | 29.10.2020 வரை வருகை பதிவேடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதி, மணவாளன் மற்றும் சாந்தகுமார் ஆகியோர் நேற்று கையொப்பம் செய்யவில்லை. | Oct- 27 முதல் Nov-25 வரை உள்ள தாளில் -மேற்பார்வையாாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 02. | தினசரி விற்பனை பதிவேடு (Daily Chitta) | 22.05.2020 ஆரம்பிக்கப்பட்டு 28.10.2020 தேதி வரையில் விற்பனை செய்த மதுவகைகள் பற்றிய விவரம் எழுதப்பட்டுள்ளது. | 28.10.2020 உள்ள தாளில் - மேற்பார்வையாாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 03. | நகர்வு பதிவேடு (Movement Register) | 11.06.2018 முதல் 29.10.2020 வரை பணியாளர்கள் நகர்வை பதிவு செய்துள்ளார்கள்ள. | கடைசி Serial-68- ன் உள்ள தாளின் கீழ் - மேற்பார்வையாாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 04. | ஆய்வு பதிவேடு மற்றும் தணிக்கை பதிவேடு | 28.03.2016 முதல் 28.10.2020 வரை செலான் ஒட்டப்பட்டுள்ளது. | 28.10.2020 கடைசி தாளின் கீழ் - மேற்பார்வையாாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 05. | அட்டை பெட்டி விவரம் (Empty Carton Register) | 25.05.2016 முதல் 21.10.2020 வரை அட்டை பெட்டிக்கான செலுத்திய தொகை விவரம். கடைசியாக 21.10.2020 ந்தேதி ICICI Bank A/c.No.7588 கணக்கில் ரூபாய்.20,000/- செலுத்தப்பட்டுள்ளது. | 21.10.2020 கடைசி தாளின் கீழ் - மேற்பார்வையாாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 06. | பொறுப்பு பதிவேடு | 22.05.2020 முதல் 29.10.2020 வரை பொறுப்பு பதிவேடு எழுதப்பட்டுள்ளது. | 29.10.2020 கடைசி தாளின் கீழ் - மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 07. | Invoice | 03.10.2020 முதல் 29.10.2020 வரை உள்ள Invoice- கள் - மொத்தம்-13 invoice-கள் | 03.10.2020 தேதி முன்பக்கம் மற்றும் 29.10.2020 தேதி invoice கடைசி தாளின் கீழ் -மேற் பார்வையாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |
| 08. | தினசரி சரக்கு விற்பனை மற்றும் இருப்பு பட்டியல் | 5-பக்கம் கொண்ட A3 தாளில் முன்னிருப்பு, விற்பனை, நிலுவை மற்றும் விற்பனை தொகை விவரம். | முதல் பக்கம் மற்றும் கடைசி பக்கத்தின் கீழ் மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசன், இளநிலை உதவியாளர் திரு.M.மதன், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.S.தீனதயாளன் மற்றும் திரு.ரஜனிகாந்த், ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகியோர் கையொப்பம் செய்யப்பட்டது. |

மேற்படி கடையில் இருப்பு நிலவரத்தை Physical Verification (புல தணிக்கை) செய்தபோது ஜீங்காரோ பீர்-12 (மதிப்பு ரூபாய் 1,680/-), Honey Day Brandy (180 ml) - 48 Bottle (மதிப்பு ரூபாய் 5,760/-) ஆகியவை இருப்பு பதிவேட்டில் உள்ளதைவிட அதிகமாக இருந்தது, இதன் மொத்த மதிப்பு ரூபாய் 7,440/- (Excess Amount) ஆகும். அதுபோல புல தணிக்கையின் போது Sea Breeze (180 ml)-1 Bottle (மதிப்பு ரூபாய் 160/-), Resolute Pink Vodka (180 ml)-4 Bottle (மதிப்பு ரூபாய் 1,080/-) ஆகியவை இருப்பு பதிவேட்டில் உள்ளதைவிட குறைவாக உள்ளது, இதன் மொத்த மதிப்பு ரூபாய் 1240/- (Shortage Amount) ஆகும். மேற்படி அதிகபடியான மதுபானங்கள் மற்றும் குறைவாக உள்ளவற்றை குறித்து மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசன் அவர்களிடம் கேட்க தவறுதலாக விட்டுபோய்விட்டது என்று கூறினார். இந்த வழக்கிற்கு தேவையான 8-ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்தான ரூபாய் 12,000/- (500 x 24 = 12,000/-) வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டு, இந்த திடீர் சோதனை 29/30.10.2020 விடியற்காலை 02.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி டாஸ்மாக் கடையில் உள்ள பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்படி

0கடையில் இரண்டு CCTV கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கடையில் திடீர் தணிக்கையின் போது ஆஜரில் இருந்த ஊழியர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்கண்ட இருதுறை கூட்டு திடீர் சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறைகள் 29.10.2020 மாலை 19.55 மணி முதல் 30.10.2020 விடியற்காலை 02.45 மணிவரை தயார் செய்யப்பட்டது. இன்று 30.10.2020 ந்தேதி பகல் 12.15 மணியளவில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் சேர்ந்து நேற்று 29.10.2020 தேதி வேலூர் பழைய பேருந்து நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள மதுபான கடை எண்.11111 -ல் இருதுறை கூட்டு தீடீர் தணிக்கையின்போது பணியில் இருந்த மேற்பார்வையாளர் திரு.வெங்கடேசன், கூடுதல் மேற்பார்வையாளர் திரு.M.பலராமன் மற்றும் விற்பனையாளர் திரு.D.கருணாநிதி ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூபாய் 12,000/- மற்றும் இத்துடன் ஆவணங்கள், செயல்முறைகள் மற்றும் புகாருடன் இணைத்து நடவடிக்கைகாக ஒப்படைக்கின்றேன். Sd/-xxxxxxxx 30.10.2020 SRI ICO Vellore (M.S. தீனதயாளன்), ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9.

Sir,

Received the complaint on 30.10.2020 at 12.15 hrs and a case was registered in Vellore Vigilance and Anti-Corruption, Cr.No.10/2020, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018. Sd/-xxxxx M.Rajanikanth, 30.10.2020 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore. The FIR in original along with the complaint and seizure mahazar proceeding was sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

30/10/20

Inspector of Police
Vigilance & Anti. Corruption
Vellore-1.